விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 05.36 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 05.42 p.m

## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.632/2024

Petitioner side witness : ம.சா.1 Date : 18.02.2025

| | |
|---|---|
| Name : தமிழரசு | Taluk : மேட்டூர் |
| Father Name : விஸ்வநாதன் | Calling : பில்டிங் காண்டராக்டர் |
| Village : தூக்கனாம்பட்டி கிழக்கு | Age : 56 |

(Complainant present. Accused absent. Filed petition and allowed.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பில்டிங் கான்டிரக்டர். இதுவரை நான் 100 பில்டிங் வேலை செய்திருப்பேன். 100 பில்டிங்கும் யாராவது வீடு கட்ட பணம் கொடுத்தால் தான் அந்த பணத்தைப் பெற்றுக்கொண்டு ஆட்களை வைத்து வேலை செய்து கொடுப்பேன் என்றால் சரிதான். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தூக்னாம்பட்டியில் குடியிருக்கிறேன். எதிரி எப்படி பழக்கம் என்றால் நண்பர். 30 வருடமாக பழக்கம். எதிரி என்னை வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் ஏதோ ஏஜெண்ட் மாதிரி வேலை செய்கிறார். பணத்தை எங்கு வைத்து வாங்கினார் என்றால் என் வீட்டில் வைத்து வாங்கினார். அவருடன் யார் வந்தார்கள் என்றால் அவர் மட்டும் தான் வந்தார். நான் பணம் கொடுக்கும் சமயத்தில் வீட்டில் நானும் என் மனைவி, மகள் மற்றும் மகன் ஆகியோர் இருந்தார்கள். ரூ.8 லட்சம் ஒரே தொகையாக எதிரிக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ரூ.8 லட்சத்தை வங்கியிலிருந்து எடுத்து வந்து எதிரிக்கு கொடுத்தேனா என்றால் இல்லை வீட்டில் வைத்து

இருந்த தொகையை கொடுத்தேன். நான் பீல்டிங் கான்ட்ராட் தொழில் செய்வதால் வருமான வரி கட்டுகிறேனா என்றால் சுமாராக 25 முதல் 30 வருடமாக கட்டுகிறேன். வருமான வரி கட்டுவதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ஒரு நபர் ரொக்கமாக ரூ.8 லட்சத்தை பரிவர்த்தனை செய்யக்கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட தொகையை வங்கி மூலமாக பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் பீல்டிங் கட்டுபவர்களுக்கு லோன் வாங்கி தருவேனா என்றால் தரமாட்டேன்.

**<u>மேலும் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

**<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>**

**ஒம்/—அ..க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**